Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, SEPTEMBER 07, 2023

வியாழக்கிழமை, செப்டெம்பர் 07, 2023 | ஒளி: 09 கதிர் 079 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



## மாதிவெலயில் டுமீல்... டுமீல் ... டுமீல்...

### மதுபோதையில் வானத்துக்கு சுட்டது யார்?


மாதிவெலயில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து தனக்கு வழங்கப்பட்ட கைத்துப்பாக்கியால் இராஜாங்க அமைச்சர் ஒருவர் வானத்தை நோக்கி மூன்று முறை துப்பாக்கியால் சுட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் மூலம் அறியமுடிகிறது. தொடர்ச்சி P2



### வெளியான சில மணி நேரங்களில்

# வீடியோவை சனல் 4 ஏன் நீக்கியது

### நாமல் கேள்வி



இலங்கையில் 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி ஈஸ்டர் ஞாயிறு தினத்தன்று நடத்த குண்டுவெடிப்புகள் தொடர்பில் சர்ச்சைக்குரிய வீடியோவை ஒளிபரப்பிய இங்கிலாந்தின் சனல் 4, வீடியோக்களை அகற்றியுள்ளது.

அதன் இணையதளம் உட்பட அனைத்து சமூக வலைத்தளங்களிலிருந்தும் சர்ச்சைக்குரிய வீடியோவை நீக்கியுள்ளது.

தற்போதைய இராஜாங்க அமைச்சரான சிவநேசதுரை சந்திரகாந்தனுடன், (பிள்ளையானுடன்) பணியாற்றிய ஆசாத் மௌலானா, ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான கிட்டத்தட்ட 50 நிமிட நிகழ்ச்சித் தகவல்களை முன்வைத்திருந்தார்.

முதலாவது உண்மை விளம்பியான மௌலானா பிள்ளையானுக்கு உதவியாளராக பணியாற்றியதுடன், அரசியல் எதிரியை கொலை செய்த குற்றச்சாட்டில் சிறையில் இருந்தபோது குண்டுதாரிகளை சந்தித்துள்ளார்.கடந்த ஆண்டு இலங்கையை விட்டு வெளியேறிய மௌலானா ஐரோப்பிய புலனாய்வு அமைப்புக்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையிடம் தனது சாட்சியத்தை முன்வைத்துள்ளதுடன், இலங்கையில் உள்ள குற்றச்சாட்டுக்கள் காரணமாக தற்போது சுவிட்சர்லாந்தில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளார். தொடர்ச்சி P2

## எனக்கு எவ்வித தொடர்புமில்லை

### அகதி தஞ்சம் கோரவே ஆசாத் பொய் சொல்கிறார்: பிள்ளையான்



ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களுக்கும் குண்டுதாரிகளுக்கும் தனக்கும் இடையில் எந்த தொடர்பும் இல்லை என்று பிள்ளையான் என்று அழைக்கப்படும் கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார். தொடர்ச்சி P2

### 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் கொல்லபட்டோருக்கு

## சர்வதேச விசாரணை கோருவாரா சஜித்?

### சபையில் சார்ள்ஸ் எம்.பி கேள்வி



ஈஸ்டர் தாக்குதலுக்கு சர்வதேச விசாரணையை கோரும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்டவர்களுக்காக சர்வதேச விசாரணையை கோருவாரா? என்றும் இது தொடர்பில் அவரின் நிலைப்பாடு என்ன? என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் கேள்வியெழுப்பினார். தொடர்ச்சி P2

## ஈஸ்டர் ஞாயிறு சூத்திரதாரிகள் அரசாங்கத்துக்குள் உள்ளனரா?

### பேராயர் பேசுகையில் அவமதிக்கின்றனர் என சஜித் குற்றச்சாட்டு



அரசாங்கத்துக்குள் ஈஸ்டர் ஞாயிறு சூத்திரதாரிகள் உள்ளனரா? ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் குறித்து பேராயர் பேசுகையில் அவரை அவமதிக்கும் வகையில் அரசாங்கத்தினர் செயற்படுகின்றனர் என்றும் உடனடியாக வெளிப்படையான சர்வதேச விசாரணையை ஆரம்பிக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தினார். தொடர்ச்சி P2



## 77ஆவது ஆண்டு நிறைவு

ஐக்கிய தேசியக் கட்சியின் 77வது ஆண்டு நிறைவு கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் புதன்கிழமை (06) அனுஷ்டிக்கப்பட்டது. சமய நிகழ்வு இடம்பெற்றதுடன், கட்சியின் மூத்த தலைவர்களினால் முன்னாள் தலைவர்களின் உருவச் சிலைகளுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

பிரதீப் பத்திரண

### அரசியல் நோக்கில் பயன்படுத்தப்படும் வரை


## உண்மை சூத்திரதாரியை கண்டுபிடிக்க முடியாது

### பாதிக்கப்பட்டோருக்கு நீதியும் கிடைக்காது என்கிறார் நாமல்



அரசியல் நோக்கத்துக்காக ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் பயன்படுத்திக் கொள்ளப்படும் வரை குண்டுத்தாக்குதலின் உண்மையான சூத்திரதாரியை கண்டு பிடிக்கவும் முடியாது எனவும் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நீதியும் கிடைக்காது என்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஹம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். தொடர்ச்சி P2

## சு.கவிலிருந்து தயாசிறி எம்.பி இடைநிறுத்தம்



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகரவின் கட்சி உறுப்புரிமையை கட்சி இடைநிறுத்தியுள்ளது. தொடர்ச்சி P2

## லசந்தவை கொன்றவர் சபையில் இருக்கிறாரா?


### இதனை கேட்பதற்கு நான் அஞ்ச மாட்டேன். இதற்கு பதிலளியுங்கள்



சன்டே லீடர் பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவை கொலை செய்த கொலையாளி பாராளுமன்றத்தில் இருக்கின்றரா? என்றும் அது குறித்து அரசாங்கம் பதிலளிக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (06) விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில், தொடர்ச்சி P2

## சரணடைந்த சசித்திரவுக்கு செப்.15 வரை விளக்கமறியல்




ஆட்ட நிர்ணயம் செய்ததாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட முன்னாள் தேசிய கிரிக்கெட் வீரர் சசித்ர சேனாநாயக்கவை எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ், புதன்கிழமை (06) உத்தரவிட்டார்.

விளையாட்டுத்துறை அமைச்சின் விசேட பொலிஸ் விசாரணைப் பிரிவில் புதன்கிழமை (06) சரணடைந்த நிலையில் கைது செய்யப்பட்டசசித்ர சேனாநாயக்க நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. தொடர்ச்சி P2

## "கையை அகற்றியதை ஏற்கவே முடியாது"

யாழ். வைத்தியசாலையில் பணியாளர் செய்த தவறினால் காய்ச்சலுக்காக அனுமதிக்கப்பட்ட 8 வயது சிறுமியொருவர் தனது கையை இழந்துள்ளார் என்றும் சிறுமியின் கை அகற்றப்பட்டமை ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றும் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், சம்பவம் தொடர்பில் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார். தொடர்ச்சி P2

## கதைவிட வேண்டாமென முரளிக்கு மனோ உபதேசம்

### திரைப்பட முன்னோட்ட 'ட்ரெயிலரில்" பயன்படுத்த வேண்டாம்



நாட்டை, உலகை திரும்பி பார்க்க வைக்கும் மலையக தமிழன் என்று சொல்லுங்கள் என்றும் தடை செய்யப்பட்ட வார்த்தை பிரயோகம் வேண்டாம் என்றும் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், கிரிகட் வீரர் முத்தையா முரளிதரனிடம் தெரிவித்துள்ளார்.

கிரிகட் வீரர் முத்தையா முரளிதரனின் வாழ்க்கை சரிதம் என்ற அடிப்படையில் வெளிவர உள்ள 800 என்ற திரைப்பட்டத்தின் முன்னோட்ட காணொளியில் இடம்பெறும் சர்ச்சைக்குரிய சொற்பிரயோகம் தொடர்பில் மனோ எம்பி வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. தொடர்ச்சி P2

### நம்பிக்கையில்லா பிரேரணை தோற்கடிக்கப்பட்டால்

## ஆரோக்கியமே தோற்றுப்போகும்



பாராளுமன்றத்தில் சுகாதார அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை தோற்கடிக்கப்படலாம் என்றும் ஆனால் தோற்கடிக்கப்படுவது நம்பிக்கையில்லா பிரேரணையை அல்ல, மக்களின் எதிர்பார்ப்பும் அவர்களின் ஆரோக்கியமுமே என்று ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.யான காவிந்த ஜயவர்தன தெரிவித்தார். தொடர்ச்சி P2

### எதிர்காலத்தில் குறைந்தது

## 10 பல்கலைக்கழகங்கள் நாட்டில் உருவாக்கப்படும்



எதிர்காலத்தில் குறைந்தபட்சம் 10 பல்கலைக்கழகங்களையாவது நாட்டில் உருவாக்க எதிர்பார்த்துள்ளதாகவும், மாணவர் கடன் திட்டங்களின் ஊடாக இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் உயர்கல்வியை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுக்க எதிர்பார்த்திருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார். தொடர்ச்சி P2

# வீடியோவை சனல் 4 ஏன் நீக்கியது

இந்த அறிக்கை நிகழ்ச்சித்திட்டம் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக நீண்ட விமர்சனத்தை முன்வைத்து பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளது.

பெரும்பாலான காணொளிகள் லசந்த விக்ரமதுங்கவின் கொலைக்கு அர்ப்பணிக்கப்பட்டவை, மேலும் ஆசாத் மௌலானாவும் குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்தும் அறிக்கைகளை வெளியிட்டிருந்தார்.

பிள்ளையான் குழுவுடன் இணைந்து ஆயுதக் கும்பலை அன்றைய அரசாங்கம் உருவாக்கி, ஊடகங்களை அடக்குவதற்கும் எதிரணியினரை மௌனமாக்குவதற்கும் பயன்படுத்தியதாக ஆசாத் மௌலானா சுட்டிக்காட்டியிருந்தார்.

எனினும், இந்த குற்றச்சாட்டுகளை புதன்கிழமை (06) இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வில் மறுத்திருந்த பிள்ளையான், இது குறித்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறையிடப்போவதாக அறிவித்திருந்தார்.

மேலும், ராஜபக்ஷர்களுடன் சனல் 4க்கு 2009 ஆம் ஆண்டு யுத்த முடிவிலிருந்து வரலாற்று ரீதியிலான பகை இருப்பதாகத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சனல் 4 வெளியிட்ட காணொளிகளில் நம்பகத்தன்மை இருக்குமானால் அதை எதற்காக அவர்கள் தமது இணையத்தளத்திலிருந்து நீக்க வேண்டுமென கேள்வி எழுப்பியுள்ளார்.

## எனக்கும் எவ்வித தொடர்புமில்லை

இங்கிலாந்தின் சனல் 4 வெளியிட்ட வீடியோவில் பிள்ளையானுடன் பணியாற்றிய ஆசாத் மௌலானா முதன்மை உண்மை விளம்பியாக, 2019ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடையவர்கள் குறித்து தகவல்களைத் தெரிவித்திருந்தார்.

இது குறித்து பாராளுமன்றத்தில் புதன்கிழமை (06) கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர், வெளிநாட்டில் புகலிடம் கோருவதற்காக தனது முன்னாள் பேச்சாளர் பொய்களை கூறியதாக குறிப்பிட்டார்.

தனிப்பட்ட பிரச்சினைகளுக்காக தனது குடும்பத்துடன் இலங்கையிலிருந்து வெளியேறுவதாக அசாத் மௌலானா ஒரு வருடத்துக்கு முன்னர் தமது கட்சிக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்ததாக சு ட்டிக்காட்டினார்.

தாக்குதல் நடத்தியவர்களுடன் தொடர்புள்ள மத, அரசியல் மற்றும் சமூக சக்திகளை பாதுகாக்க அசாத் மௌலானா முயற்சிப்பதாக தனக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் ஆவணப்படம் தொடர்பில் தாம் அச்சப்படத் தேவையில்லை எனவும் குறிப்பிட்டார்.

கிழக்கில் தமது கட்சியின் இருப்பை அழிக்க சில தரப்பினரின் முயற்சியாகக் கருதப்படலாம் எனவும் சனல் 4 காணொளியில் வெளிப்படுத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் மாத்திரமன்றி, ஆசாத் மௌலானாவின் கூற்றுக்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கு சர்வதேச உதவியை கோரியுள்ள சந்திரகாந்தன், இவ்வாறான வீடியோக்கள் மற்றும் குற்றச்சாட்டுகள் இலங்கையில் மீண்டும் ஒரு உறுதியற்ற தன்மையை ஏற்படுத்தும் என்றார்.

## சரணடைந்த சசித்திரவுக்கு செப்.15 வரை விளக்கமறியல்

3 மாத வெளிநாட்டு பயணத்தடை விதித்து கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம், கடந்த ஒகஸ்ட் 14ஆம் திகதி உத்தரவிட்டது.

2020 ஆம் ஆண்டு நடைபெற்ற லங்கா பிரீமியர் லீக்கில் ஆட்ட நிர்ணயம் செய்தமை தொடர்பில் முன்னாள் தேசிய கிரிக்கட் வீரருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் கோரிக்கை விடுத்திருந்தார்.

அதற்கமைய சசித்திர சேனாநாயக்க நாட்டை விட்டு வெளியேறுவதைத் தடுக்குமாறு குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்துக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

சச்சித்ர சேனாநாயக்கவுக்கு எதிராக குற்றவியல் குற்றச்சாட்டை முன்வைக்க விளையாட்டுத்துறை அமைச்சின் விசேட புலனாய்வுப் பிரிவுக்கு சட்டமா அதிபர் திணைக்களம் பணிப்புரை வழங்கியுள்ளதாக நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டது.

2020 நவம்பர்-டிசெம்பர் மாதங்களில் ஹம்பாந்தோட்டையில் நடைபெற்ற லங்கா பிரீமியர் லீக்கில் பங்கேற்ற இரண்டு கிரிக்கெட் வீரர்களை துபாயில் இருந்து தொலைபேசி அழைப்புகள் மூலம் ஆட்டநிர்ணயம் செய்ய அணுகியதாக சச்சித்ர சேனாநாயக்க மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## மாதிவெலயில் டுமீல்... டுமீல் ... டுமீல்...

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த குறித்த இராஜாங்க அமைச்சர், மதுபோதையில் தனது இல்லத்தின் பெல்கனிக்கு வந்து மூன்று முறை வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

செவ்வாய்க்கிழமை (05) இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினரால் உயர் அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குறித்த இராஜாங்க அமைச்சர் கடந்த காலங்களில் பல சர்ச்சைக்குரிய சம்பவங்களால் சமூகத்தில் விமர்சிக்கப்பட்டவர் என்று தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சு.கவிலிருந்து தயாசிறி எம்.பி இடைநிறுத்தம்

கட்சியின் யாப்பை மீறியமைக்காக அவருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படும் என்று கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

14 நாட்களுக்குள் ஒழுக்காற்று குற்றச்சாட்டுகள் அனுப்பப்படும் என்றும் தயாசிறி ஜயசேகரவுக்கு எழுதிய கடிதத்தில் தலைவர் மைத்திரி தெரிவித்துள்ளார்.

கட்சியின் பொதுச் செயலாளராக ஜயசேகர பதவி வகிக்க முடியாது என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளடன், பதில் பொதுச் செயலாளராக சரத் ஏக்கநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

## லசந்தவை கொன்றவர் சபையில் இருக்கிறாரா?

“தற்போதைய ஜனாதிபதியின் அரசியல் பயணத்தில் மிகவும் பலமாக இருந்தவரே லசந்த விக்கிரமதுங்க, இதனால் ஜனாதிபதி தலைமையிலான இந்த அரசாங்கம் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பான விசாரணைகள் குறித்து என்ன நடவடிக்கை எடுத்துள்ளது.

யார் இந்த கொலையுடன் தொடர்புபட்டுள்ளனர். இந்த கொலையுடன் தொடர்புடையவர்களை இந்த அரசாங்கம் வெளிப்படுத்தாதா? லசந்த விக்கிரமதுங்கவை கொலை செய்த கொலைக்காரர் இந்த சபையில் இருக்கின்றரா? இதனை கேட்பதற்கு நான் அஞ்ச மாட்டேன். இதற்கு பதிலளியுங்கள். ஒவ்வொரு குழுக்கள், ஆயுதக் குழுக்களுக்கு நாங்கள் பயப்படவில்லை” என்றார்

## கதைவிட வேண்டாமென முரளிக்கு மனோ உபதேசம்

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, “இந்நாட்டு இந்திய வம்சாவளி மலையக தமிழர் மத்தியில், தடை செய்யப்பட்ட வார்த்தையை உங்கள் திரைப்பட முன்னோட்ட “ட்ரெயிலரில்” பயன்படுத்த வேண்டாம்.

அந்த வார்த்தையை நானே நேரடியாக தடை செய்து காட்டியுள்ளேன். கதையம்சத்துக்கு தேவை என என்னிடம் கதைவிட வேண்டாம். நானே ஒரு கதாசிரியர். எனக்கு இது தெரியும்.

அந்த இடத்தில் “நாட்டை திரும்பி பார்க்க வைத்த மலையக தமிழன்” என்று போடுங்கள். சரியாக வரும்” என்று குறிப்பிட்டுள்ளார்.

## சர்வதேச விசாரணை...

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணையை கோரி கத்தோலிக்க மக்களின் வாக்குகளை பெற்றுக்கொள்ள அவர் முயற்சிக்காது, 2009இல் தமிழினம் அழிக்கப்பட்டமை தொடர்பான செனல் 4 வீடியோ தொடர்பிலும் எதிர்க்கட்சி நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (06) நடைபெற்ற சுகாதார அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான முதலாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

“சர்வதேச விசாரணையொன்றை எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்தியுள்ளார். இதனை நாங்கள் வரவேற்கின்றோம். ஆனால் 2009 ஆம் ஆண்டு மிருகத்தனத்திற்கும் மேலாக எம் இன மக்கள் கொன்றழிக்கப்பட்டனர். அதனையும் செனல் 4 வெளியிட்டிருந்தது. இசைப்பிரியா புலிகளின் குரல் வானொலியில் பணியாற்றினார் என்பதற்காக அவரை மானபங்கப்படுத்தி மிகவும் கொடூரமாக கொலை செய்த வீடியோ வெளியாகியிருந்தது.

அந்த விடயத்தை பல முறை இந்த சபையில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரியுள்ளனர். இந்நிலையில் ஈஸ்டர் தாக்குதல் ஆட்சி மாற்றத்திற்காக நடந்தது என்று சர்வதேச விசாரணையை கோருகின்றார்.

இந்நிலையில் 2009 ஆம் ஆண்டில் சர்வதேச தரவுகளின் படி நாற்பதாயிரம் பேர் என்று கூறினாலும், ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள், யுவதிகள் உள்ளிட்டோர் கொன்றொழிக்கப்பட்டனர். இதுபற்றி எதிர்க்கட்சி தலைவரின் கருத்து என்ன என்று கூற வேண்டும்.

அதேபோன்று 2019 ஆம் ஆண்டில் வடக்கு ஆட்சி மாற்றத்தின் பின்னர் கோட்டாபய ராஜபக்ஷ வடக்கு, கிழக்கில் பௌத்த மயமாக்கலை, அங்கு தமிழ் இனப்பரம்பலை இல்லாது செய்ய சட்ட ரீதியாக பல முனைப்புகளை முயற்சித்தார். தொல்பொருள் திணைக்களத்தில் கிழக்கு மாகாணத்திற்கென செயலணியை உருவாக்கினார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் குருந்தூர் மலையில் இனரீதியில் மக்கள் முரண்படும் வகையில் அந்த பிரதேசத்தில் ஆதிசிவன் அடையாளங்களை அழித்து பௌத்த விகாரையை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று திருகோணமலையில் விகாரைகள் அமைப்பது தொடர்பில் பல சர்ச்சைகள் எழுந்துள்ளன.

2019 ஈஸ்டர் தாக்குதல் ஊடாக ஆட்சியை கைப்பற்ற சிங்கள மக்களை எப்படி ஏமாற்றினார்களோ அதேபோன்றுதான் 1956 ஆம் ஆண்டு பண்டாரநாயக்க தமிழ், சிங்கள சட்டத்தை கொண்டு வந்ததில் இருந்து தமிழர்களுக்கு எதிராக பொய்யான கதைகளை கூறி, தமிழர்கள் மீது பலநாடுகளில் இருந்து பணத்தை பெற்று போர் தொடுத்தனர்.

இதனால் நாடு பொருளாதார நெருக்கடிக்குள் உள்ளாகியுள்ளது. 1956 ஆம் ஆண்டில் தனிச் சிங்கள சட்டமூலத்தை கொண்டு வந்து பின்னர் பல்கலைக்கழகங்களில் தமிழர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த சட்டங்கள் கொண்டு வரப்பட்டது என்றார்.

## கையை அகற்றியதை ஏற்கவே முடியாது

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (06) நடைபெற்ற சுகாதார அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான முதலாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் வைத்தியசாலைகள் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருக்கின்றது. அங்கு சென்று நிலைமைகளை கண்டறிய வேண்டும் என்று சுகாதார அமைச்சருக்கு கோரிக்கை விடுத்திருந்தோம். ஆனால் அதற்கான பதில்கள் சரியாக வரவில்லை.

சுகாதார அமைச்சராக மாவட்ட, பிரதேச வைத்தியசாலைகளின் வளங்கள், ஆளணி பற்றாக்குறை தொடர்பாகவும் மற்றும் அதன் சேவைகள் தொடர்பிலும் அறியத் தவறியவராக இந்த அமைச்சர் இருக்கின்றார்.

இதேவேளை கடந்த 2 ஆம் திகதி யாழ். வைத்தியசாலையில் ஏற்றுக்கொள்ள முடியாதவகையில் பணியாளர் செய்த தவறினால் 8 வயது சிறுமியொருவர் தனது கையை இழந்துள்ளார். தவறான மருந்துகளால் காய்ச்சலுக்காக அனுமதிக்கப்பட்ட சிறுமியின் கையை சத்திரசிகிச்சை மூலம் நீக்கியுள்ளனர்.

இதற்கு தாங்கள் பொறுப்பு அல்ல என்று கூறிவிட முடியாது. சிறுமியின் கை அகற்றப்பட்டமை ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல. இந்த விடயம் தொடர்பாக நீங்கள் அறிந்துள்ளீர்களா? இது தொடர்பான விசாரணை எந்த வகையில் அமையும் என்றும் கூற வேண்டும்” என்றார்.

“இது தொடர்பில் பணிப்பாளர் ஊடாக விசாரணை முன்னெடுக்கப்படுகின்றது. அது தொடர்பில் அறிக்கையொன்று கையளிக்கப்படும்” என்று அமைச்சர் கெஹலிய பதிலளித்தார்.

## ஆரோக்கியமே தோற்றுப்போகும்

சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெலவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை பாராளுமன்றத்தில் புதன்கிழமை (06) முன்வைத்து உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

“சுகாதார அமைச்சரின் பொறுப்பற்ற செயற்பாட்டினால் அப்பாவி மக்கள் தற்போது பாதிக்கப்பட்டுள்ளார்கள். மருந்து பற்றாக்குறை, விசேட வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேற்றம் ,தரமற்ற மருந்து கொள்வனவு ஆகியவற்றால் சுகாதாரத்துறை முழுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது.

மருந்து தட்டுப்பாட்டினால் முக்கிய சிகிச்சைகள் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளன. நாட்டில் உள்ள பெரும்பாலான வைத்தியசாலைகளில் உயிர்காக்கும் மருந்து பொருட்களுக்கான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அரச வைத்தியசாலைகளில் மருந்து தட்டுப்பாடு மற்றும் மருத்துவ சிகிச்சைகள் நிறுத்தப்படும் போது நோயாளிகள் தனியார் வைத்தியசாலைகளுக்கு செல்ல நேரிடும். நாட்டு மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் தனியார் வைத்தியசாலைகளுக்கு பொதுமக்களால் எவ்வாறு செல்ல முடியும்,? இதனால் வசதியில்லாதவர்களின் உயிர் ஆபத்துக்குள்ளாகியுள்ளது

அதுமட்டுமன்றி வைத்தியர்கள் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

## 10 பல்கலைக்கழகங்கள் நாட்டில் உருவாக்கப்படும்

21ஆம் நூற்றாண்டுக்குப் பொருத்தமான புதிய கல்வி முறையை தயாரிப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி, இதற்காக வெளிநாடுகள், துறைசார் நிபுணர்கள், மாணவர் பாராளுமன்றம் ஆகிய தரப்புக்களின் ஆலோசனைகளும் பெறப்படும் எனவும் தெரிவித்தார்.

இரத்தினபுரி சீவலி மத்திய கல்லூரியின் மாணவர் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்னும் இரண்டு வாரங்களில் நிறுவப்படவுள்ள அரசியல் கட்சிகளின் மறுசீரமைப்பு தொடர்பான புதிய ஆணைக்குழுவில், மாணவர் பாராளுமன்றங்களின் கருத்துக்களையும் யோசனைகளையும் வழங்க முடியும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மாணவர்கள் தமது எதிர்காலத்தை திட்டமிடுவதற்கு தேவையான பாடங்களை தெரிவுசெய்வதற்கான சந்தர்ப்பம் அந்த பல்கலைக்கழகங்களின் ஊடாக வழங்கப்படுமெனவும், புதிய தொழில்நுட்ப கல்லூரிகளை நிறுவுதல் உட்பட கல்வித்துறையின் பல்வேறு சீர்த்திருத்தங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

## ஈஸ்டர் ஞாயிறு சூத்திரதாரிகள் அரசாங்கத்துக்குள் உள்ளனரா?

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (06) ஈஸ்டர் ஞாயிறு சம்பவம் தொடர்பில் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், மேலும் தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பாக வெளிப்படைத் தன்மையுடன் பக்கச்சார்பற்ற, நியாயமான விசாரணையை நடத்துமாறு தொடர்ச்சியாக நாங்கள் கோரிக்கைகள் முன்வைத்து வந்தோம். இந்த மிலேட்சத்தனமான தாக்குதல்களால் பல உயிர்களை இழக்க நேரிட்டது. இந்த தாக்குதலை எப்போதும் அனைவரும் கண்டிக்கின்றனர். இந்த

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் நியாயமான விசாரணை நடக்கவில்லை என்பதனை பெரும்பான்மையான மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். இது பாரதூரமான விடயமே. இந்த தாக்குதலில் இறந்த மக்களுக்கு நீதி, நியாயம் நிலைநாட்டப்பட வேண்டும்.

அவ்வாறு கூறியே இந்த அரசாங்கம் அமைக்கப்பட்டது. இவ்வாறு கூறிவந்த அரசாங்கம் இந்த தாக்குதலின் பங்குதாரர்களா? இதன் உண்மைகளை நாங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

இந்த தாக்குதல் தொடர்பாக நடத்தப்பட்ட அனைத்து விசாரணைகளும் மூடி மறைக்கப்பட்டுள்ளன.

தாக்குதலை அடிப்படையாகக்கொண்டு முஸ்லிம் மக்கள் மீது நடத்தப்பட்ட இனவாத, மதவாத தாக்குதல்கள் நினைவுள்ளதா? அதனை காட்டிதானே ஜனாதிபதி, பிரதமர் ஆசனங்களுக்கு வந்தார்கள். தேசிய ஐக்கியத்தை சீரழித்து தான் ஆட்சிக்கு வந்தார்கள். இவர்களால் தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகளை கண்டுபிடிக்க முடியவில்லை. உண்மைகளை வெளிப்படுத்தவில்லை.

இவ்வாறான நிலைமையில் தாக்குதலின் உண்மைகளை தேட சர்வதேசம் சில செயற்பாடுகளை முன்னெடுக்கின்றது என்றார்.

## உண்மை சூத்திரதாரியை...

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (06) இடம்பெற்ற சுகாதார அமைச்சருக் எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

“2019 ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவை வெற்றி பெற வைப்பதற்காகவே ஈஸ்டர் ஞாயிறு குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது என்ற தவறானதொரு நிலைப்பாட்டை தோற்றுவிக்க ஒரு தரப்பினர் முயற்சிக்கிறார்கள். குண்டுத்தாக்குதலை பொதுஜன பெரமுன தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டது என்றுகூறப்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஏனெனில் 2019 ஆம் ஆண்டுக்கு முன்னர் 2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் பொதுஜன பெரமுன அமோக வெற்றி பெற்றது. எனவே நாங்கள் கொள்கை அடிப்படையில் செயற்படுகின்றோமே தவிர சந்தர்ப்பவாத அரசியல் செய்யவில்லை.

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் பல்வேறு மட்டத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.720 பேருக்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டு 70 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நாட்டுக்கு வெளியே அமெரிக்காவிலும் மூன்று வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறான நிலையில் ஈஸ்டர் ஞாயிறு குண்டுத்தாக்குல் சம்பவம் மற்றும் விசாரணைகள் தற்போது தேர்தல் பிரசாரத்துக்காக பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது. அரசியல் நோக்கத்துக்காக ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் பயன்படுத்திக் கொள்ளப்படும் வரை குண்டுத்தாக்குதலின் உண்மையான சூத்திரதாரியை கண்டு பிடிக்கவும் முடியாது. பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நீதியும் கிடைக்காது” என்றார்.





# “அழிக்காதே அழிக்காதே”

திருகோணமலை - குச்சவெளி பிரதேச செயலகத்திற்கு முன்னால் பாரிய கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நேற்று (05) இடம்பெற்றது.

திருகோணமலை - புல்மோட்டை தொடக்கம் நிலாவெளி வரையான கடற்கரைப் பகுதிகளில் புவி சத்திரவியல் சுரங்க திணைக்களத் தலைவரின் தன்னிச்சையான ஒப்பந்தத்தின் மூலம் கனிய மணல் அகழ்வதற்கான ஆராய்வு செய்வதற்கான அளவீடு நடவடிக்கையை உடனடியாக இடைநிறுத்துமாறு கோரியே இந்த கவனயீரப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் பிரதேச வாசிகள், சங்கங்களின்



பிரதிநிதிகள், கடற்தொழில் மீன்பிடி சங்கத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டு தங்களின் எதிர்ப்புக்களைத் தெரிவித்தனர்.

இதன்போது, “அழிக்காதே அழிக்காதே இயற்கை வளத்தை அழிக்காதே”, “சுரண்டாதே சுரண்டாதே மக்களின் வாழ்வாதாரத்தை சுரண்டாதே”, “நிறுத்து நிறுத்துஇ GSMB தலைவரின் தன்னிச்சையான முடிவை நிறுத்து”, “அழிக்காதே அழிக்காதே சுற்றுலாத்துறையை அழிக்காதே”, “மண் அகழ்வு ஒப்பந்தத்தை உடன் நிறுத்து” என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பினர்.

ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத்திற்கு விஜயம் செய்த குச்சவெளி பிரதேச செயலாளர் கே.குணநாதனிடம் குறித்த விடயத்தை நாட்டின் ஜனாதிபதி, கிழக்கு ஆளுநர், மாவட்ட செயலாளர் ஆகியோர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லுமாறு கோரிய மகஜரினை ஆர்ப்பாட்டக்காரர்கள் கையளித்தனர்.

## கணவன் தாக்கியதில் மனைவி பலி

நவி

தன்னுடைய மனைவியை விறகு கட்டையால் தாக்கி படுகொலைச் செய்த கணவன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கம்பளை லொக்கு அங்க வெலம்பொட பகுதியிலேயே இந்த சம்பவம் புதன்கிழமை (06)



இடம்பெற்றுள்ளது.

குடும்ப தகராறு காரணமாக 28 வயதான கணவன் தனது இளம் மனைவியை தாக்கியுள்ளார்.

உயிரிழந்துள்ள பெண் 1. 1/2 வயது பெண் குழந்தையின் தாய் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் குறித்த பெண்ணின் கணவரை வெலம்பொட பொலிஸார் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கதிரைகள் அன்பளிப்பு

கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய கொள்கைப் பரப்புச் செயலாளருமான கே.எம். அப்துல் றஸ்ஸாக் (ஜவாத்), அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா கல்முனைக் கிளை காரியாலய பாவனைக்கு ஒரு தொகை கதிரைகள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

நூருல் ஹுதா உமர்



## 418 பேருக்கு நிரந்தர நியமனம்

சிவாணி ஸ்ரீ

இரத்தினபுரி மாவட்டத்தை சேர்ந்த பல்துறை பயிற்சி உதவியாளர்கள் 418 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு, சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவின் திசாநாயக்க தலைமையில் சப்ரகமுவ மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் புதன்கிழமை (06 இடம்பெற்றது.

2020 ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் பல்துறை பயிற்சி உதவியாளர்கள் 34,700 பேர் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டனர். இதில் சப்ரகமுவ மாகாணத்தில் 4679 பேர் பல்துறை பயிற்சி உதவியாளர்களாக சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டன. இதில் 1050 பேரின் நியமனங்கள் பல்வேறு காரணங்களால் இடை நிறுத்தப்பட்டன.

சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களில்



பல்துறை பயிற்சி உதவியாளர்கள் 830 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதன் முதற்கட்டமாக இரத்தினபுரி மாவட்டத்தில் 418 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கி வைக்கப்பட்டது.

இதை தவிர சப்ரகமுவ மாகாணத்தில் மேலும் பல்துறை பயிற்சி உதவியாளர்கள் 2729 பேருக்கு விரைவில் நிரந்தர நியமனம் வழங்கப்பட உள்ளமை குறிப்பித்தக்கது.

## அழுகிய மீன்கள், புகையிலை எரியூட்டி அழிக்கப்பட்டன

வ.சக்தி



மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட களுவாஞ்சிகுடி பொதுச் சந்தையில் விற்பனை செய்யப்பட்ட அழுகிய மீன்கள் அப்பகுதி பொதுச் சுகாதார பரிசோதகரால் புதன்கிழமை (06) பறிமுதல் செய்யப்பட்டு எரியூட்டி அழிக்கப்பட்டன.

களுவாஞ்சிகுடி பொதுச் சந்தைப் பகுதிக்கு தமது கடமையின் நிமிர்த்தம் அங்கு திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டிருந்த குறித்த பொதுச் சுதாதார பரிசோதகர் குறித்த மீன்களைக் கைப்பற்றி அவற்றை வியாபாரிகள் மேலும் பொதுமக்களுக்கு விற்பனை செய்யாமல் பறிமுதல் செய்து எரியூட்டி அழித்துள்ளார்.

இதன்போது 76 கிலோ கிராம் அழுகிய மீன்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இதில் பழுதடைந்த மீன்களை விற்பனை செய்த 2 வியாபாரிகளுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்துள்ளதாகவும், மேலும் 6 வியாபாரிளுக்கு எதிராக எச்சரிக்கை விடுக்கப்பட்டதாகவும், களுவாஞ்சிகுடிப் பகுதி பொதுச் சுகாதார பரிசோதகர் கே.இளங்கோவன் தெரிவித்தார்.

இந்நிலையில் புகையிலை மற்றும் மதுசார விற்பசைன் சட்டத்திற்கு முரணான வகையில், வெளிக்காட்டி விற்பனை செய்த 11 கிலோ கிராம் புகையிலையையும் இதன்போது களுவாஞ்சிகுடி பொதுச் சந்தைப் பகுதியிலிருந்து பறிமுதல் செய்யப்பட்டு எரியூட்டி அழிக்கப்பட்டதாக பொதுச் சுகாதார பரிசோதகர் கே.இளங்கோவன் மேலும் தெரிவித்தார்.

## 2 திருடர்களால் திருடப்பட்ட குளியல் அறை உபகரணங்கள் மீட்பு

எஸ்.றொசேரியன் லெம்பேட்ம

ன்னார், தலைமன்னார் பிரதான வீதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் ஹோட்டல் ஒன்றின் குளியல் அறைகளில் இருந்து திருடப்பட்ட ஒரு தொகுதி குளியல் அறை உபகரணங்களுடன் இருவர் சந்தேகத்தின் பேரில், மன்னார் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் செவ்வாய்க்கிழமை (5) கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்க ளிடமிருந்து சுமார் 5 இலட்சம் ரூபாய்



பெறுமதியான உபகரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் கைது செய்யப்பட்டவர்கள் மன்னார் தாழ்வுபாடு மற்றும் புத்தளம் பகுதிகளைச் சேர்ந்த 23 மற்றும் 58 வயதுடையவர்கள் என மன்னார் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

## 2,100 கடல் சங்குகள் கற்பிட்டியில் சிக்கின

ரஸீன் ரஸ்மின்

கற்பிட்டியில் இருந்து மன்னாருக்கு சட்ட விரோதமாக அனுப்புவதற்கு தயாராக வைத்திருந்த கடல் சங்குகள், பொலிஸாரினால் திங்கட்கிழமை (04) கைப்பற்றப்பட்டுள்ளன.

இ.போ.ச பஸ்ஸின் ஊடாக மன்னாருக்கு



கொண்டு செல்வதற்கு தயார்படுத்தப்பட்டிருந்த 2,100 கடல் சங்குகள் கைப்பற்றியுள்ளதாக கற்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

கற்பிட்டி பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் பேரில் பயணத்தை தொடங்கும் முன் கற்பிட்டி நகரில் பஸ்ஸை சோதனையிட்ட பொலிஸார் பஸ்ஸின் பின்புற டிக்கியில் இருந்த 07 உரைப் பைகளில் இருந்து 2100 கடல் சங்குகளை மீட்டுள்ளனர்.

## மானை வேட்டையாடிய மூவர் கைது

ரஸீன் ரஸ்மின்

ஆனமடுவ , பெட்டிகம பௌத்த விகாரைக்குட்பட்ட பகுதியில் மான்களை வேட்டையாடுவோர் என்ற சந்தேகத்தின் பேரில், மூவரை திங்கட்கிழமை (04) கைது செய்த்தாகவும் ஒருவர் மான்களை வேட்டையாடும் துப்பாக்கியுடன் அவ்விடத்தில் இருந்து தப்பியோடியுள்ளதாகவும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காட்டு யானைகளை விரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்களர் சிலர், சந்தேகத்திற்கு இடமான வகையில் வாகனமொன்று அப்பகுதியுள்ள விகாரை ஒன்றுக்குள் சென்று கொண்டிருந்ததை அவதானித்து பின் அங்கு சுற்றிவளைப்புகளை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்கள் பயணித்த , மான்களை வேன்டையாடுவதற்காகவே பிரத்தியேகமாக மாற்றியமைக்கப்பட்ட



கெப்வண்டியும் , வேட்டையாடிய மான் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

சந்தேக நபர்கள் 35 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட மஹகும்புக்கடவல, ரத்மல்கஹவெவ மற்றும் தொடுவாய் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் மஹவெவ , தொடுவாய் மற்றும் வென்னப்புவ போன்ற பகுதிகளில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல்களுக்கு அதிக விலைக்கு வேட்டையாடப்பட்ட மான்கள் விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## ஆசிரியரின் விடுதிக்குள் ஆழக்குழி: நால்வருக்கு தண்டம்

செ.தி பெருமாள்

மஸ்கெலியா மௌசாகலை நீர்தேக்கத்துக்கு அருகாமையில் உள்ள ஆசிரியர் ஒருவரின் விடுதியில் சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டு வந்த நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

மஸ்கெலியா பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய திங்கட்கிழமை (04) இரவு மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது குறித்த நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், அகழ்வுக்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களை மீட்டுள்ள பொலிஸார், மாணிக்கக்கல் அகழ்வு மேற்கொள்ளப்பட்ட விடுதி ஆசிரியர் ஒருவரின் விடுதி எனவும் அங்கு 35 அடி ஆழமான குழி தோண்டப்பட்டுள்ளதாகவும் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக கூறினர்.

கைது செய்யப்பட்ட நான்கு சந்தேக நபர்களையும் ஹட்டன் நீதவான் நீதிமன்றில் முன்னிலை



படுத்தப்பட்டபோது, நால்வருக்கு எதிராக சுமத்தப்பட்டிருந்த குற்றங்களை ஒப்புக்கொண்டனர். அதனையடுத்து 67 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் செலுத்துமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

தண்டப்பணத்தை செலுத்தியதன் பின்னர் அந்த நால்வரும் நீதிமன்றத்தினால் விடுதலைச் செய்யப்பட்டுள்ளனர் என மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார்.

## சிவில் விமானப் போக்குவரத்து துறை தொடர்பான நிகழ்ச்சி

ஏ.எச்.ஏ. ஹுஸைன்சி

வில் விமானப் போக்குவரத்துத் துறையை மாணவர்கள் மத்தியில் ஊக்குவிப்பதற்காக தெளிவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான விசேட கலந்துரையாடல், மட்டக்களப்பு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் செவ்வாயன்று (05) இடம்பெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து



அதிகார சபையினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் எதிர்வரும் செப்டம்பர் 19ஆம் திகதி நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது .


புனித ஆசீர்வாதப்பர் கல்லூரி - நலன்புரி சங்கம்
சிறப்பு பொதுக்கூட்டம் மற்றும் வருடாந்த பொதுகூட்டம்
தொடர்பான அறிவித்தல்

கொழும்பு 13, ஆசீர்வாதப்பர் கல்லூரியின் நலன்புரி சங்கத்தின் நிதியாண்டு 2017/18, 2018/19, 2019/20, 2020/21, மற்றும் 2021/22 வருடங்களுக்கான நிதியறிக்கைகளை சமர்ப்பிக்கும் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 30ம் திகதி சனிக்கிழமை மு.ப 9.00 மணிக்கு நடைபெறும். அதனைத் தொடர்ந்து 2022/23ற்கான நிதியறிக்கை சமர்ப்பிப்பும், 2023/24ற்கான முகாமைத்துவக் குழுத் தெரிவும் மு.ப 10.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

விண்ணப்பப் படிவங்களை கல்லூரி நலன்புரி சங்க காரியாலயத்தில் 08-09-2023ம் திகதிக்கு முன் வார நாட்களில் மு.ப 8.00 - பி.ப 3.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவம் முத்திரையிடுப்பட்ட கடிதவுறையில் இடப்பட்டு, செயலாளர், நலன்புரி சங்கம், புனித ஆசீர்வாதப்பர் கல்லூரி, கொழும்பு - 13 எனும் முகவரிக்கு, பொதுக்கூட்டம் நடைபெற இருவாரங்களுக்கு (14 நாட்களுக்கு) முன்னர் அஞ்சல் செய்யப்பட வேண்டும். அல்லது அவ்விண்ணப்பங்களை கல்லூரி நலன்புரி சங்க காரியாலயத்தில் வார நாட்களில் மு.ப 8.00 மணி முதல் பி.ப 3.00 மணி வரை கையளிக்கலாம்.

கல்லூரி நலன்புரி சங்கத்தில் அங்கத்தவர்களாகவிருக்கும் எமது மாணவரின் பெற்றோர் தமது பிள்ளையின் பாடசாலை பதிவுப் புத்தகத்தையும் (College Record Book), பழைய மாணவர்களும் ஆசிரியர்களும் தமது தற்போதைய நலன்புரி சங்க அங்கத்துவ இலக்கத்தை உள்ளடக்கிய, அங்கத்துவ அட்டையையும் கூட்டத்தில் கலந்துகொள்ளப் பயன்படுத்தலாம்.

ருவன் சமரசிங்க
தலைவர்,
கல்லூரி நலன்புரி சங்கம்,
புனித ஆசீர்வாதப்பர் கல்லூரி,
கொழும்பு - 13

# தடைகளைத் தகர்த்து தூர நோக்குடன் முன்செல்லுங்கள்

விடைத்தாள்கள் மதிப்பிடப்படுமா? இல்லையா? குறிப்பிட்ட காலத்துக்குள் பெறுபேறுகள் வெளியிடப்படுமா? இல்லையா? அடுத்தது என்ன? என்றெல்லாம் சிந்தித்துக் கொண்டிருந்த கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்கு தோற்றியிருந்தோருக்கான பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

அகில இலங்கை ரீதியில், மாவட்ட மட்டத்தில் மற்றும் பாடசாலை மட்டங்களில் அதிசிறந்த பெறுபேறுகளைப் பெற்றவர்கள், பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிகக் கூடியவர்களின் பெறுபேறுகள், மாணவர்களின் பெயர் விபரங்களுடன் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டுள்ளன.

தாங்கள் எவ்வாறு கற்றோம் என்றும் கற்பதற்கான நுணுக்கங்களையும் அம்மாணவர்கள் தெரிவித்திருந்தனர். அதனை ஒரு முன்னுதாரணமாகக் கொண்டு, மீளவும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான வழிகளை அமைத்துக் கொள்ளவேண்டும். அதனூடாக இரண்டாவது தடவையிலேயே சிறந்த பெறுபேறுகளை பெற முயற்சிக்கலாம்.

வெட்டுப்புள்ளி குறைவாக இருக்கும் மாணவர்கள், அடுத்தகட்டமாக என்ன? செய்வதென சிந்தித்துக் கொண்டிருக்கின்றனர். பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகுவேன் என உறுதியாய் நம்பியிருந்தவர்கள் அடுத்தடுத்த கட்டங்களுக்கு ஏற்கெனவே நகர்ந்துவிட்டனர்.

இதற்கிடையே, பல்கலைக்கழகங்களுக்கு நுழைவதற்கான உரிய பெறுபேறுகள் கிடைக்காதவர்கள், ஆசிரியர் கலாசாலைகள், தொழிற்நுட்ப கற்கைநெறிகள், ஆகியனவற்றுக்கு விண்ணப்பிக்கலாம். ஏனைய துறைகளையும் தேடியறிந்து அந்தந்த துறைகளுக்குள் நுழைந்துவிடலாம்.

2022/2023 பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகள் பல்வேறான சவால்களுக்கு முகங்கொடுத்திருந்தனர். இது பலரின் மனங்களில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும். அதனால், பரீட்சைகளில் கவன சிதறல்களுக்கு முகங்கொடுத்து இருக்கலாம். அவை பெறுபேறுகளில் தாக்கங்களை ஏற்படுத்தி இருக்கக்கூடும்.

கற்றல், உயர்தர பெறுபேற்றுடன் நின்றுவிடாது. அதனை தொடரவேண்டும். படித்தவர்களுக்கே வேலை இல்லை. இதற்கு மேலும் படித்து என்னதான் செய்வது என்ற நினைப்பை பலரும் சமூக வலைத்தளங்களில் விதைத்துள்ளனர். அதனை, பொருட்படுத்த வேண்டாம்.

இதற்கிடையே, 13 ஆண்டுகள் கற்றதால் உரிய பெறுபேறுகள் கிடைக்கவில்லையென கூறி, மலையகத்தை சேர்ந்த பலரும், பெரும் நகரங்களுக்கு படையெடுத்து சாதாரண தொழில்களில் ஈடுபட முயற்சிக்கலாம். அதனையும் கைவிடவேண்டும்.

ஒரு தொழிலில் இருந்துகொண்டே, கற்கமுடியும். அவ்வாறான வேலைகளை தேடிக்கொள்ளவேண்டும். அது, அவ்வாறானவர்களின் பொருளாதாரத்தை ஓரளவுக்கு தூக்கிவிடுவதுடன் கல்வியையும் மேம்படுத்தும். வலிகளுக்கு பல வழிகளின் ஊடாக தீர்வை தேடிக்கொள்ளவேண்டும்.

வாழ்க்கை மிகக்குறுகியது. பயணிக்க வேண்டிய தூரத்தின் எல்லையே யாராலும் கண்டறியமுடியாது. எல்லையைத் தேடுவதைப் போல கற்றலில் ஆழத்தை தேடிச் சென்றுகொண்டே இருக்கவேண்டும். அந்தப்பாதையில் பல தடைகள் ஏற்படும்.

அவற்றையெல்லாம் ஒரு பாடமாகக் கற்றுக்கொண்டு முன்னோக்கி செல்லவேண்டும்.

எதிர்பார்த்த பெறுபேறுகள் கிடைக்காமையால். மனவிரக்தி அடைந்தும் சில இருக்கலாம். தோல்விகளால் அல்லது தடை தாண்டல்களால் தங்களுக்கு கிடைக்கும் அனுபவங்களை வைத்துக்கொண்டு, தூரநோக்குடன் பயணிப்பதே சிறந்ததாகும்.




தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்:

# ராஜபக்ஷக்களின் தொடர்பு?!



புருஜோத்தமன் தங்கமயில்

உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத்தாக்குதல்கள், ராஜபக்ஷக்களை மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வரும் நோக்கத்தோடு நடத்தப்பட்டதான குற்றச்சாட்டுக்கள் எழுந்திருக்கின்றன. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் சூத்திரதாரிகள் என்று சிலரை அடையாளப்படுத்தும் ஆவணப்படத்தை சாட்சியங்களோடு பிரித்தானியாவின் 'சனல்4' தொலைக்காட்சி வெளியிட்டிருக்கின்றது. அதில், ராஜபக்ஷக்களின் விசுவாசிகளான அரச புலனாய்வுச் சேவையின் தலைவர் மேயர் ஜெனரல் சுரேஷ் சாலே, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான சிவநேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) ஆகியோர், தாக்குதல்தாரிகளோடு எவ்வாறான தொடர்புகளைப் பேணியிருந்தார்கள் என்று சாட்சியங்கள் வெளிப்படுத்துகின்றனர்.

சனல்4 ஆவணப்படத்தின் சாட்சியங்களில் ஒருவரான அசாத் மௌலானா, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முன்னாள் பேச்சாளர். அதுபோல பிள்ளையானின் நேரடி உதவியாளராக செயற்பட்டவர். இன்னொருவர், அரச முக்கிய அதிகாரி என்று அடையாளப்படுத்தப்படுகின்றது. ஆனால், அவரின் முகமோ, பெயர் விபரங்களோ வெளிப்படுத்தப்படவில்லை.

2019 ஏப்ரல் 21ஆம் திகதி மூன்று தேவாலயங்கள், மூன்று நட்சத்திர விடுதிகளிலும் கிட்டத்தட்ட ஒரே நேரத்தில் நடத்தப்பட்ட ஆறு தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களில் 39 வெளிநாட்டவர்கள் 39 பேர் உள்ளிட்ட 250க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டார்கள். சஹ்ரான் உள்ளிட்ட 9 இஸ்லாமிய பயங்கரவாதிகள் தற்கொலைத் தாக்குதலை நடத்தியிருந்தார்கள். இவ்வாறான தாக்குதல்கள் நடத்தப்படப் போகின்றது என்று இந்தியா உளவு அமைப்பு, இலங்கையின் பாதுகாப்புக் கட்டமைப்புக்கு ஏற்கனவே அறிவுறுத்தல்களை வழங்கியிருந்த போதும், அவை கணக்கில் எடுக்கப்படாது பெரும் விவாதமானது.

சஹ்ரான் தலைமையிலான இஸ்லாமிய பயங்கரவாதக் குழுவினர் தாக்குதலை நடத்தியிருந்தாலும், தாக்குதலின் உண்மையான சூத்திரதாரிகள் யார் என்பது தொடர்பிலான சந்தேகங்கள் தாக்குதல்கள் இடம்பெற்ற சிறிய காலத்திலேயே எழுந்திருந்தது. அப்போது ராஜபக்ஷக்களுக்கும் தாக்குதல்களுக்கும் தொடர்பு இருப்பதான குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்பட்டிருந்தன.

மைத்திரி- ரணில் கூட்டு நல்லாட்சியில் நாட்டின் பாதுகாப்பு கேள்விக்குறி ஆக்கப்பட்டுள்ளதாக காட்டுவதற்காக உயிர்த்த ஞாயிறுப் பேரழிவு தாக்குதல்கள் சில தரப்புக்களுக்கு தேவைப்பட்டிருக்கின்றன. அந்தத் தரப்பின் நோக்கங்களை நிறைவேற்றி கொடுப்பதில் சுரேஷ் சாலேக்கும் பிள்ளையானுக்கும் உள்ள தொடர்புகள் பற்றி சனல்4 ஆவணப்படம் வெளிப்படுத்துகின்றது.

அசாத் மௌலானா தற்போது, சுவிஸ்லாந்தில் அடைக்கலம் புகுந்திருக்கிறார். அவர் 2021களிலேயே ராஜபக்ஷக்களுக்கும் உயிர்த்த ஞாயிறுக் குண்டுத்தாக்குதல்களுக்கும் இடையிலான தொடர்பு குறித்து வெளிநாட்டு தூதுவராலயங்களோடும் சில ஊடகவியலாளர்களோடும் பேசியிருப்பதாக குறிப்பிட்டிருக்கின்றார்.

அசாத் மௌலானா உயிர்த்த ஞாயிறுக் குண்டுத்தாக்குதல்கள் பற்றி வெளிப்படுத்திய விடயங்களில் முக்கிய கூறுகள்...

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை கொழும்பில் வைத்து 2018 பெப்ரவரி 18ஆம் திகதி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முக்கியஸ்தர் பிரசாந்தனும் தானும் சந்தித்தாக கூறும் மௌலானா, அப்போது ஜனாதிபதித் தேர்தலில் தான் வென்றால் பிள்ளையான் சிறையில் இருந்து வெளியில் வர முடியும் என்று கோட்டா தெரிவித்தாக வெளிப்படுத்துகிறார்.

கோட்டாவுடனான சந்திப்பின் பின்னர், அடுத்த நாள் மட்டக்களப்பு சிறையில் இருந்த பிள்ளையானை நேரடியாக சந்தித்து விடயங்களைக் கூறியதாகவும், அப்போது கோட்டாவை ஜனாதிபதியாக்குவதற்காக முக்கிய திட்டங்களுடன் சுரேஷ் சாலே செயற்படுவதாக பிள்ளையான் தன்னிடம் கூறியதாக மௌலானா தெரிவிக்கிறார்.

2018இல் சஹ்ரானையும் சுரேஷ் சாலேயையும் தான் சந்தித்தாகவும் மௌலானா வெளியிடுத்தியிருக்கிறார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் நடைபெற்றதும், சிறையில் பிள்ளையானைச் சந்தித்து விடயங்களை கேட்ட போது, "அவர்கள் போட்ட திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். நீ எந்த இடத்திலும் வாய் திறக்காமல் இரு." என்று பிள்ளையான் தன்னிடம் கூறியதாக மௌலானா தெரிவிக்கிறார்.

உயிர்த்த ஞாயிறுக் குண்டுத்தாக்குதல்களுக்கும் ராஜபக்ஷக்களுக்கும் இடையில் தொடர்பு இருப்பதான குற்றச்சாட்டுக்கள் தாக்குதல்கள் இடம்பெற்று சில காலத்துக்குள்ளேயே எழுந்த பின்னணியில் பாராளுமன்றத்திலும் அந்த விடயங்கள் விவாதிக்கப்பட்டது.

குறிப்பாக, 2021 இல் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்த ஹரீன் பெர்ணான்டோ உள்ளிட்டவர்கள் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் தொடர்பு நபர்கள் பற்றி பேசியிருந்தார். இதன் பின்னர், அரச புலனாய்வு அமைப்பின் தலைவரான சுரேஷ் சாலே தன்னை நேரடியாக அழைத்து, "உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் திட்டங்கள் தொடர்பில் வேறு யாரிடமாவது பேசியிருந்தீர்களா? இல்லையென்றால், அந்த விடயங்கள் எப்படி வெளியில் வந்திருக்கின்றன. எனக்கும் உனக்கும் பிள்ளையானுக்கு மட்டுமே அந்தத் திட்டங்கள் தெரியும்?" என்று விசாரணைகளை மேற்கொண்டிருக்கிறார். அதன் பின்னர், பிள்ளையான் கொழும்பு வந்து, சுரேஷ் சாலேயை தனித்து சந்தித்தார். "வழக்கமாக சுரேஷ் சாலேயை சந்திக்கும் போது, என்னையும் அழைத்துச் செல்லும் பிள்ளையான் தனித்து சென்றது அதிக சந்தேகத்தை ஏற்படுத்தியது. அந்தச் சந்திப்பு முடிந்ததும் என்னை மட்டக்களப்பு அழைத்து கொலை செய்யும் நோக்கம் அவர்களிடம் இருப்பதாக, புலனாய்வுத்துறை உறுப்பினர் ஒருவர் எனக்கு தெரிவித்த நிலையில், நான் அச்சமடைந்து இந்தியா சென்றேன்.." என்றும் அசாத் மௌலானா ஊடகங்களிடம் வெளிப்படுத்தியிருக்கிறார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களுக்கும் சுரேஷ் சாலேக்கும் தொடர்பு இருப்பதாக கத்தோலிக்க பாதிரியார் ஒருவர் ஏற்கனவே வெளிப்படுத்தியிருந்தார். அதுபோல, அசாத் மௌலானா 2021 காலப்பகுதியில் வெளிநாட்டு தூதுவராலயங்களுக்கும் ஊடகவியலாளர்களிடமும் வெளிப்படுத்தியிருக்கிறார். ஆனால் அப்போது, எந்த தூதுவராலயமும் அது குறித்து பேசவில்லை. ஏன், ஊடகவியலாளர்களே அமைதி காத்தார்கள். ராஜபக்ஷக்கள் அதிக அதிகாரத்தோடு ஆட்சியில் இருந்தமை அதற்கு காரணமாக இருக்கலாம்.

அசாத் மௌலானா வெளிப்படுத்தியுள்ள விடயங்களை பாராளுமன்ற உறுப்பினர்களும், ஊடகவியலாளர்களும், இராஜதந்திரிகளும் ஏற்கனவே அறிந்திருந்த போதிலும் அவற்றைக் குறித்து நினைத்த அளவிற்கு பேசுவதற்கு தயங்கினார்கள்.

ஆனால், சனல்4 ஆவணப்படம் வெளியே வந்ததும், சற்று தைரியத்தோடு பேசத் தொடங்கியிருக்கிறார்கள். ஏன், கோட்டாவோடு கடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு தோற்ற சஜித் பிரேமதாசவே, இப்போதுதான் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் சூத்திரதாரிகள் குறித்து பேசுகிறார். அதுவும், சர்வதேச விசாரணை தேவை என்கிறார். ஓர் எதிர்க்கட்சித் தலைவரான அவர், இந்த விடயங்கள் குறித்து ராஜபக்ஷக்கள் ஆட்சியில் இருக்கும் போதே கேள்விகளை எழுப்பியிருக்க வேண்டும். ஆனால், அப்போது அவரும் ஆட்சியின் அதிகார எல்லைகளுக்குப் பயந்து பம்மியிருக்கின்றார்.

அசாத் மௌலானாவின் வெளிப்படுத்தல்களை பிள்ளையான் நிராகரித்திருக்கிறார். அவர், வெளிநாட்டில் அகதி அந்தஸ்து கோருவதற்காக, போலியான தகவல்களை வெளிப்படுத்துவதாக கூறியிருக்கிறார். பிள்ளையான் அரச துணைக்குழுவாக இயங்கி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரான ஜோசப் பரராஜசிங்கத்தை சுட்டுக் கொன்றதாக குற்றச்சாட்டு உண்டு. அந்த வழக்கிலேயே, சில ஆண்டுகளாக நீதிமன்றக் காவலில் சிறையில் இருந்திருந்தார். அதுபோல, மட்டக்களப்பிலும் கொழும்பிலும் கடத்தல்கள், கப்பம் கோரல்கள், கொலைகளோடு பிள்ளையான் தலைமையிலான குழுவுக்கு தொடர்பு இருந்ததாக குற்றச்சாட்டுகள் இருந்தன.

இப்போது வெளிவந்திருக்கின்ற ஆவணப்படம், ராஜபக்ஷக்களின் மீள்எழுச்சியை தடுப்பதற்காக உதவலாம். அது, ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதியாக தொடர்ந்தும் வைத்திருக்க வேண்டிய தரப்புக்களின் தேவைக்காக நிகழ்ந்திருக்கலாம் என்கிற சந்தேகங்களையும் நிராகரிப்பதற்கு இல்லை.

இலங்கை இறுதி மோதல்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களை சனல்4 தொலைக்காட்சி முக்கிய ஆவணப்படங்கள் மூலம் வெளிப்படுத்தியிருந்தது. அப்போது, அதுபற்றி தென் இலங்கையில் யாரும் அலட்டிக்கொள்ளவில்லை. இப்போது, தங்களின் தேர்தல் வெற்றிக்கு உதவும் என்பதற்காக சனல்4 ஆவணப்படத்தை தத்தெடுத்திருக்கின்றனர். சர்வதேச விசாரணை கோருகின்றனர்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களில் மட்டுமல்ல, இறுதி மோதல்களில் நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள், படுகொலைகள் குறித்தும் சர்வதேச விசாரணை அவசியமானது. அதுதான் ஓரளவுக்கேனும் நீதியை நிலை நிறுத்த உதவும்.



## வாழ்வியல் தரிசனம்

இந்த உலகில் கதாநாயகர்களை விட வில்லன்கள் அதிமாக இருக்கிறார்கள். இவர்கள் தங்களை வீரர்கள் என எண்ணி, அநியாயங்களை கூசாமல் செய்கின்றனர்.

உலகம் இவர்களைப் பார்த்துப் பழகிவிட்டது. தீமைகளை எதிர்ப்பவர்களைப் பயங்கரவாதிககள் என்கின்றார்கள். உரிமையைக் கோரினால் தவறா?

துட்டர்களின் பக்கம் ஒரு பெரும் கூட்டமே இருக்கின்றது. மிகவும் கஸ்டப்பட்டு நொடிந்துபோகும் நாட்டில், அரசியல்வாதிகள் என்ன செய்கின்றார்கள்?

கெட்டவர்களுக்கே சாமரம் வீசுவதற்கு ஆட்கள் இருக்கின்றார்கள். தவறு செய்பவர்களுக்குப் பயந்து, மக்கள் பேசாமல் இருக்கின்றார்கள். தவறு செய்யும் அரசியல்வாதிகளுக்கு தண்டனைகள் கிடைப்பதில்லை.

நாட்டின் சொத்துகள் விரயமாவது பற்றி, பலருக்கும் தெரியாது, புரியவும் மாட்டாது. கற்பனையில் தான் நல்ல தலைவனை நினைக்கமுடியும்.

காட்டுக்குள் வசிக்கலாம் என்றால், காடுகளையும் அழித்துவிட்டார்கள். என்ன செய்ய முடியும்?

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### வயல் நிலத்தினை முழுமையாக விடுவியுங்கள்


கிளிநொச்சி பூநகரி ஜெயபுரம் கிராம மக்கள் வயல் நிலத்தினை முழுமையாக பெற்றுத் தருமாறு கிளிநொச்சி மாவட்டச் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1983 ஆம் ஆண்டு ஜெயபுரம் குடியேற்ற திட்டம் உருவாக்கப்பட்டது. தென்னிலங்கையில் வன் செயல்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு என இக்குடியேற்றத் திட்டம் உருவாக்கப்பட்டது. மேட்டுக் காணிகள் தொடக்கத்தில் வழங்கப்பட்டிருந்தாலும் தேவன் குளத்தின் கீழ் 550 ஏக்கர் வரையான நிலப் பரப்பு ஜெயபுரம் மக்களுக்கு என வயல் நிலங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது.

போர் சூழல் காரணமாக வயல் நிலங்களை மக்கள் முழுமையாக துப்பரவு செய்ய முடியவில்லை. 2010 ஆம் ஆண்டு மீள் குடியேற்றத்தின் பின்னர் வயல் நிலத்தினை முழுமையாக வழங்குமாறு ஜெயபுரம் மக்கள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வரும் நிலையில் தற்போது வரை 130 ஏக்கர் வரையான வயல் நிலம் மட்டுமே விவசாயிகளுக்கு கிடைத்துள்ளது.

தற்போது தேவன் குளம் புனரமைக்கப்பட்டு வருவதன் காரணமாக தேவன் குளத்தின் கீழான ஜெயபுரம் மக்களுக்கு உரிய வயல் நிலத்தினை முழுமையாக விடுவிப்பதற்கு மாவட்டச் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நடராசா கிருஸ்ணகுமார்




# 'ஆறாம் நிலம்' திரைப்பட விமர்சனம்



சுப்ரமணியம் காயத்திரி
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
ஊடகக் கற்கைகள் துறை
இரண்டாம் வருடம்

காலம் கடந்து போனாலும் ஈழ யுத்தம் எமக்கு அளித்த வடுக்களும் வலிகளும் எம் ஈழமக்களின் மனதுகளில் இன்றுவரை கதைபேசி வருகின்றது. 'அணைக்கடந்த வெள்ளம் அழுதாலும் வராது' எனும் எம் சான்றோர்களின் முதுமொழி உணர்த்தும் விளக்கத்திற்கமைய, ஈழப் போர்க்களத்திலே தம் கண்களின் முன்னே பறிபோன எம்மவர்களின் விலைமதிப்பற்ற உயிரும், வலிந்து காணாமற் ஆக்கப்பட்டோர் எனும் பெயரில் இன்றுவரை விபரமறியப்படாத உறவுகளும் இனியும் எம்மிடம் திரும்பி வரப்போவதில்லை என்பதே நிதர்சனமான உண்மையாகும்.

யுத்தக்காலத்தில் ஈழமக்கள் அனுபவித்த வலிகளின் ஆழம் எவ்வளவு கணமிக்கது, என்பதனை எவராலும் எளிதாக கூறவோ அல்லது வெளிப்படுத்திவிடவோ இயலாது. அத்தனை துன்பங்களையும் அனுபவித்த குடிமகன் ஒருவரே அத்துன்பங்களை சிறந்ததொரு கலைப்படைப்பாக்கியுள்ளான். என்று பெருமிதம் கொண்டு கூறும் வகையில் இயற்றப்பட்டுள்ள திரைப்படமே ஆறாம் நிலமாகும்.

இயக்குனர் ஆனந்தரமணனின் இயக்கத்தில் 'நவயுகா மற்றும் மன்மதன்பாஸ்கி' ஆகியோரை பிரதான கதாபாத்திரங்களாக மையப்படுத்தி சிவசாந்தகுமாரின் ஒளிப்பதிவின் கீழ் யுத்தம் கடந்த போதும் எம் ஈழமக்கள் எதிர்கொண்ட பல இன்னல்களை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக்காட்டும் விதமாக ஆறாம்நிலம் இயற்றப்பட்டுள்ளது.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலங்களையே சங்கத் தமிழன் உலகிற்கு அறிமுகப்படுத்தி வைத்துள்ளான். இவ் ஐவகை நிலங்களையும் கடந்த புதியதொரு நிலமொன்றினை தற்கால உலகிற்கு இவ் திரைப்பட இயக்குனர் அறிமுகப்படுத்தியுள்ளார்.

ஐவகை நிலங்களுள் ஏனைய நால்வகை நிலங்களைக் காட்டிலும் பாலைநிலம் எவ்வாறு வாழ்வதற்குப் பொருத்தமற்றதாக காணப்படுகின்றதோ? அதுபோலவே ஆறாவது நிலமாகும். யுத்தக் காலப்பகுதியில் ஈழ பிரதேசங்கள் பலவற்றில் எதிரிகளை தாக்கவேண்டுமெனும் நோக்கில் நிலத்தினுள் கண்ணிவெடிகள் பல புதைத்து வைக்கப்பட்டன.

யுத்தம் முற்றுப்பெற்றதன் பின்னர்கூட நிலத்தில் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள் அகற்றப்படவில்லை. இவ் கண்ணிவெடிகள் நிறைந்த நிலப்பிரதேசம் எந்த உயிரினமும் வாழ்வதற்கு தகுதியற்ற நிலமாக மாற்றம்பெற்றது என்பதனை குறிப்பால் உணர்த்தும் ஆறாம் நிலம் எனும் பெயர் திரைப்படத்திற்கு மிகவும் பொருத்தமானதாக அமைந்துள்ளது.

மலைமகள் எனும் பெண், சிறு பெண் குழந்தை மற்றும் கண்ணிவெடிகளை அகற்றும் குழுவின் தலைவன் என மூன்று பிரதான கதாபாத்திரங்களோடு கவிதா, கிராமசவகர், மலைமகளின் மாமியார் என உப கதாபாத்திரங்களின் துணையுடன் மிக எளிமையாக ஈழ யுத்தத்தின் பின்விளைவுகளை மெதுவாக படத்தின் இறுதிவரை நகர்த்திச் சென்றுள்ளார் இயக்குனர்.

கணவனின் துணையின்றி மாமியாரின் அரவணைப்பில், 'அப்பா எப்ப வருவார்?' எனும் கேள்வியுடனே காத்திருக்கும் ஒரு பெண் குழந்தையின் தாயாக நவயுகாவின் நடிப்பு யதார்த்தமானது. தனது தந்தையின் அன்பு கிடைக்காதா? எனும் ஏக்கத்துடன் தெருவோரத்தில் அமைக்கப்பட்டுள்ள விளம்பரப் பலகையில் மோட்டார் துவிச்சக்கரவண்டியொன்றில் சிறுமியொருவர் தனது தந்தையோடு பயணிப்பதினைப் பார்த்துவிட்டு தானும் தன் தந்தையுமே பயணிப்பதாக எண்ணிப்பார்த்து விட்டு அச் சிறுமி தன்னைத் தானே சாந்தப்படுத்திக் கொள்ளும் காட்சி பார்வையாளர்களை கட்டாயமாக விழி கலங்கச் செய்யுமளவிற்கு உணர்வுமிக்கதொரு காட்சிப்பகுதியாகும்.

மலைமகளின் கணவனுக்கு நிகழ்ந்தது என்ன? ஈழ யுத்தம் நிறைவிற்கு வந்த பொழுது ஆயிரக்கணக்கான ஈழ உறவுகள் மீளத்திரும்பி விடலாம் எனும் நம்பிக்கையுடன் சிங்கள இராணுவத்தினரிடம் சரணடைந்தனர்.

ஈழயுத்தம் முற்றுப்பெற்று இன்றைக்கு கிட்டத்தட்ட 14 வருடங்கள் கடந்த போதிலும் இராணுவத்திடம் சரணடைந்த உறவுகள் திரும்பி வரவுமில்லை அல்லது அவர்கள் உயிருடன் தான் இருக்கின்றார்களா? எனும் வினாவிற்கு இன்றுவரை பதில்கள் எதுவும் கிடைக்கப்பெறவுமில்லை.

இவ்வாறே ஈழயுத்தத்தின் இறுதியில் தன் முன்னாடியே சிங்கள இராணுவத்திடம் தனது கணவர் சரணடைந்தார். என்றாவது ஒருநாள் தன்னிடமே தனது கணவர் மீளத்திரும்பி வந்துவிடுவாரெனும், நம்பிக்கையோடு மலைமகள் காத்திருக்கின்றாள். மலைமகள் தனது இறந்தகால வாழ்வினைப் பற்றியே எண்ணிக்கொண்டு நிகழ்கால வாழ்க்கையினை வாழ்வதற்கு மறந்துப் போவதொடு தந்தையின் அன்பின்றி தனது அரவணைப்பில் வாழும் தனது பெண்குழந்தையின் எதிர்கால வாழ்வினையும் மறந்தவளாய் தனக்கு ஆதரவாகா இருந்த மாமியாரையும் மரணத்திடம் பறிகொடுத்து விடுகின்றாள்.

மலைமகளைப் போன்றதொரு கதாபாத்திரமே கவிதா ஆகும். ஆயினும் மலைமகள் போலல்லாது கவிதா சற்று எதிர்மறையான குணத்தினைக் கொண்டவளாக திகழ்கின்றாள்.'வாழ்வதற்கு என்ன வழி போனது போனதுதான் இனி எங்கட வாழ்க்கையை எப்படி வாழுறது என்று பார்க்கவேண்டும்' என்று வாழ்கின்ற ஒரு பெண்ணாக கவிதாவின் நடிப்பு யதார்த்தமிக்கதாகும்.

ஈழயுத்தத்தில் கணவனை இழந்து இன்றுவரை பதாகைகளை கைகளிலேந்திய வண்ணம் போராடும் பெண்களுக்கு பதிலாக கவிதாவினைப் போன்று யதார்த்தத் தன்மையினை ஏற்றுக் கொள்ளும் பெண்களையே தான் காணவிழைவதாக இயக்குனர் மறைமுகமாக வெளிப்படுத்தியுள்ளார் எனக் குறிப்பிடலாம்.

மலைமகளின் மாமியாரும் கூட பல சந்தர்ப்பங்களில் மறுமணமொன்றினை மேற்கொள்ளுமாறு மலைமகளினை வற்புறுத்தியபோதும் தனது கணவன் மீண்டும் வருவான் எனும் நிகழ்வதற்கு வாய்ப்பே இல்லாத விடயத்தினை மனதிற் எண்ணிக் கொண்டு மலைமகளினைப் போன்று இன்றும் பல ஈழ பெண்கள் தம்மிடம் மீதமுள்ள வாழ்வினையும் வாழ்வதற்கு மறந்தபோகின்றார்களென பல ஈழத்துப்பெண்களின் வாழ்வினை இத் திரைப்படம் எடுத்துக்காட்டியுள்ளது.

ஆறாம் நிலம் எனும் இத் திரைப்படத்தில் பிரதானமாக மூன்று கதாபாத்திரங்களின் வாழ்வியல் சித்தரிக்கப்பட்டுள்ளது. ஒன்று யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள், இரண்டாவது பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாக இருப்பவர்கள், மூன்றாவதாக பாதிக்கப்பட்டவர்களை சுற்றியுள்ள அன்பானவர்கள் எனும் மூன்று அம்சங்களை மையப்படுத்தியே கதை நகர்ந்துள்ளது.



இங்கு பாதிக்கப்பட்டவளாக மலைமகள் திகழ அவளுக்கு ஆதரவு மற்றும் அன்பினை வழங்குபவர்களாக ஏனைய கதாபாத்திரங்கள் சித்தரிக்கப்பட்டுள்ளன. யுத்தம் முடிவுற்ற தன் பின்னர் வாழ்வாதரமற்று இருந்த மக்களுக்கு கிடைத்த தொழில்வாய்ப்பு கண்ணி வெடிகளை அகற்றுதல். உயிராபத்து நிறைந்த இத்தொழிலை தமது வாழ்க்கையின் நிர்ப்பந்தத்தின் அடிப்படையில் செயற்படுகின்ற குழுக்களினைச் சேர்ந்தோரின் வாழ்வியலைப் பற்றி பேசியுள்ளது ஆறாம் நிலம். கண்ணிவெடியினை அகற்றும்போது சற்று கவனம் சிதறினாலும் உயிரே பறிபோய்விடுமென உணர்த்தும் கவிதாவின் நடிப்புச் சிறப்புக்குரியது.

திரைப்படத்தின் ஆரம்பம் மற்றும் இறுதியில் தெருவோரத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள விளம்பரம் ஒன்றே காலமாற்றத்தோடு மாற்றமடைகின்றது என்பதனை நாசூக்காக இயக்குனர் வெளிப்படுத்தியுள்ளார். விளம்பரங்களும், நாட்டின் ஆட்சியினை மேற்கொள்ளும் அரசாங்கங்களும் மாற்றமடைகின்றனவே தவிர காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளுக்கு எத்தனை யுகங்கள் கடந்தாலும் சிறந்த தீர்வொன்று எட்டப்படாது என்பதனை திரைப்படத்தினுடைய இறுதி நிமிடங்கள் எமக்கு புரிய வைத்துவிடுகின்றன.

விளம்பரப் பலகையினைப் பார்த்துக் கொண்டே வீதியனைக் கடக்கும் போது விபத்துக்குள்ளாகி உயிருக்குப் போராடுகின்ற பொழுதும் கூட அச்சிறுமியின் கேள்வி அப்பா எப்ப வருவார்? இது போன்று எத்தனையோ சிறுவர்களின் வினாக்களுக்கு ஏதாவது பதில் அல்லது தீர்வு எட்டப்படுமா? என்ற வினாவுடன் இன்னும் பலவிதமான வினாக்களை பார்வையாளர்கள் மத்தியில் தோற்றுவித்ததோடு, திரைப்படத்திற்கான இறுதி முடிவினை பார்வையாளர்களின் கைகளிலேயே ஒப்படைத்துவிட்டு குறுகிய கால நேரவோட்டத்தில் ஈழயுத்தத்தின் வடுக்களையும், வலிகளையும் சர்வதேச உலகிற்கு எடுத்துக்காட்டியுள்ளது ஆறாம் நிலம்.

எமது நாட்டின் யுத்த வரலாற்றினை திரைக்கதையாக கொண்டுள்ள திரைப்படத்தினை சிறுவர் முதல் பெரியோர் வரை குடும்பமாக இருந்து பார்வையிடுமளவிற்கு தரமான படமொன்றினை ஆனந்த ரமணன் படைத்துள்ளார்.





# கிருஷ்ணா-ஜெயந்தி.

காரைதீவு கொம்புச் சந்தியில் புதன்கிழமை (06) இடம் பெற்ற கிருஷ்ணா-ஜெயந்தி நிகழ்வு.

வி.ரி.சகாதேவராஜா









# இந்திய கலைஞர்களின் கதக் நடனம்

கொட்டாஞ்சேனை ஸ்ரீஸ்ரீராதா கிருஷ்ணா ஆலயத்தில் இன்று 7ஆம் திகதி வியாழன் கொண்டாடப்படும் ஜன்மாஷ்டமி விழாவில் உலகப் புகழ் நடனக் கலைஞர்களான இந்தியாவைச் சேர்ந்த ஹரி, சேத்தனா ஆகியோர் வழங்கும் கதக் நடனம் இடம்பெறவுள்ளது.

புதுச்செட்டித்தெரு ஸ்ரீராம் மண்டபத்தில் மாலை 7.00 மணிக்கு விழாவின் விஷேட அம்சமாக இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது.

மங்கள ஆரத்தியுடன் ஆரம்பமாகும் விழாவில் நகர சங்கீர்த்தனமும், குழந்தை கிருஷ்ணர் ஊர்வலமும் நடைபெற்று குழந்தை கிருஷ்ணருக்கு பாலாபிஷேகமும், தொட்டிலிலிட்டு தாலாட்டும் வைபவமும் இடம்பெறும்.

இரவு 11 முதல் நள்ளிரவு 12 மணிவரை ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ணருக்கு மஹா அபிஷேகமும், விஷேட ஆராதனைகளும் இடம்பெற்று அருட்பிரசாதம் வழங்கப்படும்.

நாளை வெள்ளி நண்பகல் 12 மணிக்கு சர்வதேச கிருஷ்ண பக்தி கழகத்தை ஸ்தாபித்தவரும், ஆன்மிகக் குருவுமான அருட்திரு பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதாவின் வியாச பூஜை கொண்டாடப்படவிருக்கிறது.




# 16 ஆவது திருவிழா



வரலாற்றுச் சிறப்புமிக்க அலங்கார நல்லூர் கந்தனின் வருடாந்த மஹோற்சவத்தின் 16 ஆவது திருவிழா ஆகிய திருக்கார்த்திகை திருவிழா செவ்வாய்க்கிழமை (05) மாலை பக்திபூர்வமாக இடம்பெற்றது.

எம்பெருமான் சமேதராக உள்வீதியுடாக வலம் வந்து வர்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட திருமணப்பீடத்தில் அலங்கார முருகன், வள்ளி, தெய்வானை ஆகியதெய்வங்கள் வீற்றிருந்து அருள்பாலித்தனர்.

பு.கஜிந்தன்





சீனா

# சீனப் பெருஞ்சுவரை சேதப்படுத்திய இருவர் கைது

சீனப் பெருஞ்சுவர் பார்வையிடுவதற்கு ஆண்டுதோறும் சுற்றுலா பயணிகளும் வந்து செல்கின்றனர். 4,000 மைல்கள் தொலைவில் எழுப்பப்பட்ட இந்த சுவரானது பல நூற்றாண்டுகளாக கட்டப்பட்டு உருவான ஒன்று. கடந்த 1987-ம் ஆண்டு சீன பெருஞ்சுவர் ஆனது யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய ஸ்தலங்களில் ஒன்றாக பெயரிடப்பட்டது.



சீன பெருஞ்சுவரின் ஓரிடத்தில் இடைவெளி காணப்படுகிறது. விசாரணையில், இதனை சிலர் சேதப்படுத்தி உள்ளனர் என தெரிய வந்துள்ளது. இதையடுத்து யூயு கவுன்டி அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

இதுபற்றிய விசாரணையில், 38 வயது ஆண் மற்றும் 55 வயது பெண் என இருவர் அதனை சேதப்படுத்தியது தெரிய வந்தது. அப்பகுதி வழியே கடந்து செல்வதற்காக, அவர்கள் இந்தச் செயலை செய்துள்ளனர். இதில், ஓட்டை போட்டுள்ளனர் என்றும் பராமரிப்பு செய்து அதனை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வரமுடியாத அளவுக்கு பாதிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

சுவரின் குறிப்பிட்ட பகுதியின் ஒருமைப்பாடு மற்றும் பாதுகாப்புக்கு அவர்கள் பாதிப்பு ஏற்படுத்தி உள்ளனர். அவர்கள் இருவரிடமும் பொலிஸார் தொடர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

அமெரிக்கா

## ஜி 20 இல் பைடன் பங்கேற்பது உறுதி



ஜி20 அமைப்பின் தற்போதைய தலைவராக இந்தியா செயல்பட்டு வருவதால் இந்த ஆண்டுக்கான உச்சி மாநாடு புதுடெல்லியில் வரும் 9 மற்றும் 10-ம் திகதிகளில் நடைபெறுகிறது. இந்த மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், சீன ஜனாதிபதி ஜின்பிங் உள்ளிட்ட உறுப்பு நாடுகளின் தலைவர்களுக்கு இந்தியா அழைப்பு விடுத்துள்ளது. இதை ஏற்று பல்வேறு நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்கவுள்ளனர்.

இதற்கிடையே, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் 7-ம் திகதி இந்தியா வருவதாக கூறப்பட்ட நிலையில் அவர் ஜி20 மாநாட்டில் பங்கேற்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதி ஜோ பைடனுக்கும், அவரது மனைவி ஜில் பைடனுக்கும் எடுக்கப்பட்ட கொரோனா பரிசோதனையில் ஜில் பைடனுக்கு தொற்று உறுதியாகியுள்ளது என வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. எனவே ஜனாதிபதி ஜோ பைடன் ஜி20 மாநாட்டில் பங்கேற்பாரா என கேள்வி எழுந்தது.

இந்நிலையில், வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள செய்தியில், ஜனாதிபதி ஜோ பைடனுக்கு இரு தினங்களாக எடுக்கப்பட்ட கொரோனா பரிசோதனையில் நெகடிவ் என வந்துள்ளது. இதையடுத்து, திட்டமிட்டபடி ஜனாதிபதி ஜோ பைடன் ஜி20 மாநாட்டில் பங்கேற்க இந்தியா செல்கிறார்.

நியூசிலாந்து

## 18 மாதங்கள் வலியுடன் போராடிய பிரசவ தாய்



நியூசிலாந்து. ஒக்லாந்தில் உள்ள மருத்துவமனையில் கர்ப்பிணி பெண், பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்டார்.

சுகப்பிரசவம் நடப்பதற்கு வாய்ப்பில்லாத நிலையில் அவருக்கு சி-செக்ஷன் (C-section) எனப்படும் சிசேரியன் அறுவை சிகிச்சை முறைப்படி பிரசவம் நடைபெற்றது.

பிரசவம் முடிந்து சுமார் ஒன்றரை வருடங்களுக்கு அவருக்கு கடுமையான வயிற்று வலி இருந்தது. வழக்கமான மருந்து மற்றும் மாத்திரைகளால் வலி குறையாததால், அவருக்கு எக்ஸ்-ரே எனப்படும் கதிரியக்க படங்கள் எடுக்கப்பட்டன.

சிடி ஸ்கேன் பரிசோதனையில் அவருக்கும் மருத்துவர்களுக்கும் அதிர்ச்சியளிக்கும் விதமாக, அவரது வயிற்றில், சாப்பிடும் தட்டின் அளவிற்கு ஒரு பொருள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து அப்பெண்ணிற்கு அவசர அறுவை சிகிச்சை செய்யப்பட்டு அப்பொருள் வெளியில் எடுக்கப்பட்டது. அது, மருத்துவர்களால் அறுவை சிகிச்சையின் போது உபயோகப்படுத்தப்படும் அலெக்ஸிஸ் ரிட்ராக்டர் (Alexis retractor) என்பது தெரிய வந்துள்ளது.

சென்னை

## ஒரு பிஸ்கெட் குறைந்ததால் ரூ.1 இலட்சம் இழப்பீடு



சென்னை மணலி மாத்தூர் எம்.எம்.டி.ஏ பகுதியைச் சேர்ந்தவர் டில்லி பாபு. இவர் கடந்த 2021-ம் ஆண்டு டிசெம்பர் மாதம் தெரு நாய்களுக்காக ரெண்டு 'சன் பீஸ்ட் மேரி லைட்' பிஸ்கட் பாக்கெட்டுகளை வாங்கியுள்ளார்.

அந்த பிஸ்கட் பாக்கெட் கவரில் உள்ளே 16 பிஸ்கட்டுகள் உள்ளன என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் அதைத் திறந்து பார்த்தபோது 15 பிஸ்கட்கள் தான் இருந்தது.

இதுதொடர்பில், நிறுவனம் உரிய பதில் தராமையால், நீதிமன்றத்தில் மனுமொன்றை தாக்கல் செய்தார். பிஸ்கட் பக்கட்டின் நிறையின் பிரகாரமே விற்கப்படுகின்றது. எண்ணிக்கையின் அடிப்படையில் அல்லவென நிறுவனத்தின் சார்பில் விளக்கமளிக்கப்பட்டது. காரணத்தை ஏற்க மறுத்த நுகர்வோர் நீதிமன்றம் பிஸ்கட் பக்கெட் கவரில் 16 பிஸ்கட்டுகள் உள்ளே உள்ளன என்று தான் கூறப்பட்டுள்ளது. தவிர எடையை பற்றி கூறவில்லை. எனவே, நேர்மையற்ற முறையில் வியாபாரம் செய்ததற்காகவும், சேவை குறைபாட்டிற்காகவும் வழக்கு தொடர்ந்த டெல்லி பாபுவுக்கு ஐ.டி.சி., நிறுவனம் ஒரு இலட்சம் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும்" என்று தீர்ப்பளித்துள்ளது.

அமெரிக்கா

## 'பாரத்' பெயரால் பெரும் சர்ச்சை




புதுடெல்லியில் ஜி 20 உச்சி மாநாடு வரும் 9, 10 திகதிகளில் நடைபெற இருக்கிறது. இதற்கான அழைப்பிதழ் குடியரசுத் தலைவர் மாளிகையில் இருந்து அரிசியல் பிரபலங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அதில் இந்திய குடியரசுத் தலைவர் என்று குறிப்பிடாமல், பாரத குடியரசுத் தலைவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை காங்கிரஸ் மூத்த தலைவரான ஜெய்ராம் ரமேஷும் தனது எக்ஸ் பக்கத்தில் உண்மை என்று பதிவிட்டுள்ளார். அரசியலமைப்புச் சட்டத்தில் மாநிலங்களின் ஒன்றியத்துக்கு இந்தியா என்று பெயர் உள்ளதாகவும், மாநிலங்களின் ஒன்றியம் என்பதும் தாக்குதலுக்கு ஆளாகியுள்ளதாகவும் ஜெய்ராம் ரமேஷ் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே அசாம் முதலமைச்சர் ஹிமந்த பிஸ்வ சர்மா தனது எக்ஸ் பக்கத்தில் பாரத குடியரசு என்று குறிப்பிட்டுள்ளதுடன், சுய விவரக்குறிப்பில் அசாமின் முதலமைச்சர், பாரத் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பீகார்

## ஆண்களின் திருமணத்துக்கு தடையாக இருக்கும் வீதி



சிலர் நல்ல வேலை கிடைக்காதா என பலரும் ஏங்கிக் கொண்டிருப்பது போல், பீகாரில் உள்ள ஒரு கிராமத்து இளைஞர்கள் நமக்கெல்லாம் திருமணமே ஆகாதா என விரக்தியில் இருக்கிறார்கள்.

பீகார் மாநிலத்தின் ஜாமூ மாவட்டத்திலுள்ள பரூத்தா கிராமத்தில் அக்கம்பக்கத்தில், உறவுக்கார முறையில் பெண்கள் இருந்தாலும், இந்தக் கிராமத்து இளைஞர்களுக்கு யாரும் அவ்வுளவு சீக்கிரத்தில் பெண் தர சம்மதிப்பதில்லை.

ஐம்பதிற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. இங்கு எந்தவித வீதி வசதியும் இல்லாதது தான் இவர்களின் முக்கிய பிரச்சினையாக இருக்கிறது.

இவர்களது வீட்டிலிருந்து அரை கிலோமீட்டர் தூரத்தில் பிரதான வீதி உள்ளது. அங்கு செல்வதற்கு தினமும் முழங்கால் அளவிற்கு சேறு நிறைந்த நீரில் இவர்கள் இறங்கி நடக்கிறார்கள். வீதி வசதிகள் எதுவுமே இல்லாத காரணத்தினால், இந்தக் கிராமத்தில் வசிக்கும் இளைஞர்களுக்கு யாரும் பெண் கொடுக்க மாட்டேன் எனக் கூறுகிறார்களாம். இந்தக் காரணத்திற்காகவே பல இளைஞர்கள் இன்னும் திருமணம் ஆகாமல் இருக்கிறார்கள்.

# ஆசியக் கிண்ணம்: சுப்பர் 4 -இல் இலங்கை



ஆசியக் கிண்ணத் தொடரின் சுப்பர் 4 சுற்றுக்கு இலங்கை தகுதி பெற்றுள்ளது.

லாகூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆப்கானிஸ்தானுடனான போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே சுப்பர் 4 சுற்றுக்கு நடப்புச் சம்பியன்களான இலங்கை தகுதி பெற்றுள்ளது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை, குசல் மெண்டிஸின் 92 (84), டுனித் வெல்லலாகேவின் ஆட்டமிழக்காத 33 (39), மகேஷ் தீக்‌ஷனவின் 28 (24) ஓட்டங்களோடு 50 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 291 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் குல்படின் நைப் 4, ரஷீட் கான் 2, முஜீப் உர் ரஹ்மான் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 292 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்ட் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான், மொஹமட் நபியின் 65 (32), அணித்தலைவர் ஹஷ்மத்துலாஹ் ஷகிடியின் 59 (66), ரஷ்மத் ஷாவின் 45 (40),ரஷீட் கானின் ஆட்டமிழக்காத 27 (16), நஜிபுல்லா ஸட்ரானின் 23 (15), கரிம் ஜனட்டின் 22 (13), நைப்பின் 22 (16) ஓட்டங்களோடு போராடியபோதும் 37.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 289 ஓட்டங்களையே பெற்று இரண்டு ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயனாக மெண்டிஸ் தெரிவானார்.

இந்நிலையில், கொழும்பில் இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ள சுப்பர் 4 சுற்றுப் போட்டியில் பங்களாதேஷை இலங்கை எதிர்கொள்ளவுள்ளது.




## தேசிய போட்டிக்கு தெரிவான விபுலானந்தா ஹொக்கி அணி

வி.ரி. சகாதேவராஜா

கல்வி அமைச்சு நடாத்துகின்ற தேசிய பெருவிளையாட்டுப் போட்டிக்கு கிழக்கு மாகாண சாம்பியனான காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியின் (தேசிய கல்லூரி) ஹொக்கி அணி தெரிவாகியுள்ளது.

அண்மையில் நடைபெற்ற மாகாண மட்ட இறுதிப் போட்டியில் அம்பாறை டி.எஸ். சேனநாயக்க தேசிய பாடசாலை ஹொக்கி அணியை எதிர்த்து விளையாடிய காரைதீவு விபுலானந்தா அணி 3-2என்ற கோல் கணக்கில் சம்பியனாக தெரிவாகியிருந்தது.

## 'மெஸ்ஸியின் உலகக் கிண்ண வெற்றி முற்கூட்டியே திட்டமிடப்பட்டது'



கட்டாரில் கடந்தஆண்டு நடைபெற்ற சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளன உலகக் கிண்ண முடிவானது ஆர்ஜென்டீனாவுடன் கிண்ணத்தை லியனல் மெஸ்ஸி தூக்குவதற்காக வடிவமைக்கப்பட்டதாக நெதர்லாந்தின் முன்னாள் பயிற்சியாளர் லூயிஸ் வான் கால் தெரிவித்துள்ளார்.



## ஓய்வு பெறும் டி கொக்

தென்னாபிரிக்காவின் முன்னாள் உப அணித்தலைவர் குயின்டன் டி கொக், உலகக் கிண்ணத் தொடரையடுத்து ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

எவ்வாறாயினும் 2024ஆம் ஆண்டு உலகக் கிண்ணம் வரை இருபதுக்கு -20 சர்வதேசப் போட்டிகளில் 31 வயதான டி கொக் விளையாடுவார் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

டி கொக்கின் திடீர் முடிவுக்கு எவ்வித காரணங்களும் வழங்கப்படாத நிலையில், தென்னாபிரிக்காவுக்கு அவர் விளையாடுவது பிரச்சினைக்குரியதாக இருந்தது எனக் கருதப்படுகிறது.

### இங்கிலாந்து எதிர் நியூசிலாந்து:

## சமநிலையில் முடிவடைந்த தொடர்



இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரானது சமநிலையில் முடிவடைந்தது.

நான்கு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளை இங்கிலாந்தும், மூன்றாவது போட்டியை நியூசிலாந்தும் வென்றிருந்த நிலையில், நொட்டிங்ஹாமில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற நான்காவது போட்டியை நியூசிலாந்து வென்றமையைத் தொடர்ந்தே 2-2 என்ற ரீதியில் சமநிலையில் தொடர் முடிவடைந்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

இங்கிலாந்து: 175/8 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஜொனி பெயார்ஸ்டோ 73 (41) ஓட்டங்கள். பந்துவீச்சு: மிற்செல் சான்ட்னெர் 3/30 [4], இஷ் சசோதி 2/21 [4], மற் ஹென்றி 1/31 [4])

நியூசிலாந்து: 179/4 (17. 2 ஓவ. ) (துடுப்பாட்டம்: டிம் செய்ஃபேர்ட் 48 (32, கிளென் பிலிப்ஸ் 42 (25) ஓட்டங்கள். பந்துவீச்சு: றெஹான் அஹ்மட் 2/27 [4])

போட்டியின் நாயகன்: மிற்செல் சான்ட்னெர்

தொடரின் நாயகன்: ஜொனி பெயார்ஸ்டோ

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 07 செப்டெம்பர் 2023, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.